

லயன் காமிக்ஸ்
அதிரடி ஆர்ச்சி!
ARCH
ரூ. 2-50.


மிஸ்டர். மர்மம்
ஸ்பைடர்
சாகஸம்!
மார்ச் வெளியீடு!
லயன்
காமிக்ஸ்


“S. S. டால்வெரா” இலண்டன் துறைமுகத்தை வந்தடைந்ததும், மற்ற பயணிகளை முந்திக் கொண்டு இறங்கி வந்தனர் மூன்று வி.ஐ.பி.க்கள். அவர்கள் வாசகர்களுக்கு ஏற்கனவே நன்கு அறிமுகமான விக்டர், தாம்சன் மற்றும் அவர்களுடைய அற்புத ஆற்றல் படைத்த ரோபோவான ஆர்ச்சியும்தான்!
அடடே நமக்கு வரவேற்பு தடபுடலாக இருக்கிறதே!
இந்த ஆர்ப்பாட்டமெல்லாம் ஆர்ச்சிக்கு ரொம்பப் பிடிக்கும் சரியான விளம்பரப் பிரியன்!
அதிரடி ஆர்ச்சி!
3


பத்திரிக்கை நிருபர்கள் முண்டியடித்துக் கொண்டு முன்னால் வந்தனர்-
நானே இங்கே பிரிட்டனில் தொடங்க விருக்கும் சர்வதேச பொருட்காட்சியில் நீங்களும் உங்களுடைய இந்த விந்தை ரோபோவும் விசேஷப் பாதுகாவலர்களாகப்பணியாற்ற அமர்த்தப்பட்டிருக்கிறசெய்தி உண்மைதானு? ஆம்- எனில் இந்தப் பணிக்கு குறிப்பாக நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட காரணம் என்ன வென்று கூறலாமா?
முதல் கேள்விக்கு விடை- ஆமாம்-இரண்டாவது கேள்விக்கு
பதிலை செயல் மூலமாக தெரிவித்தது ஆர்ச்சி-
ஆர்ச்சியின் ஈடிணையற்ற வலிமை- அபாரமான மதிநுட்பம்- காரணம் இப்போது புரிந்ததா? இனம் புரியாத ஏதோ ஒரு ஆபத்துஉருவாகிவிருப்பதாக பொருட்காட்சி அமைப்பாளர்கள் அஞ்சுகின்றனர்!
ஆர்ச்சியின் தனிக் கருத்து இது- பத்திரிக்கையில் போட்டு விடாதீர்கள்!
4


ஆர்ச்சியின் சவடால் பேச்சை துண்டிக்க ஒரே வழிதான் இருந்தது.
காரைக் கிளப்பு விக்டர்- அவனை விட்டு விட்டுப் போவது போல் பாசாங்கு செய்!
அலறியடித்துக் கொண்டு ஓடி வருகிறான் பார்!


புயலென ஓடி வந்த ஆர்ச்சி ஒருவழியாக காரை எட்டிப் பிடித்ததும்-
சீக்கிரம் ஏறி வா உள்ளே! கெல்போர்டில் நாளை பொருட்காட்சி திறக்கப்படுமுன் நாம் அங்கே சென்றடைய வேண்டியது அவசியம்!
ஸ்பெஷல் செக்யூரிட்டிகளாக பொறுப்பேற்க நம்மை அவர்கள் அழைத்திருக்கும் காரணம் இன்னமும் புரியவே இல்லை!


ஆர்ச்சிக்குத் தெரியும்! மின்னணு மூளையாக்கும் என்னுடையது! அங்கே புதிர்களையும் ஆபத்துக்களையும் நாம் சந்திக்க வேண்டி வரலாம்!


விரோத சக்திகள் அவர்களுடைய பயணத்தின் ஒவ்வொரு கட்டத்தையும் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தன.
குறி வைக்கப்பட வேண்டிய கார் வந்து கொண்டிருக்கிறது. ஏஜெண்ட் த்ரீ X, ஃபோர் X, டு Z, தலைவர் லிஸ்டரின் உத்தரவின்படி கிடைக்கும் முதல் வாய்ப்பைப் பயன்படுத்தித் தாக்குங்கள்!


போக்குவரத்து விளக்கு சிவப்பாக மாறியதும்-
சிகப்புன்னா ஆபத்துன்னு அர்த்தம். நிறுத்தணும்!
இவனொருத்தன் - எப்போது பார்த்தாலும் ஆபத்தைப் பற்றியே பேசிக்கொண்டு-


பச்சை விளக்குக்காக அவர்கள் காத்திருந்த நேரத்தில்- ராட்சஸ கிரேன் ஒன்று மெள்ள நகர்ந்து அவர்களுக்கு நேர் மேலே வந்தது-
உத்தரவு பெறப்பட்டது இதோ தாக்குதல் தொடங்கப்பட்டு விட்டது!
ஹே- அதென்ன விஷ் என்ற சப்தம்?


திடுக்கிட்டு மேலே ஏறிட்ட தாம்சன் அலறினான்
விஷ்ஷ்
ஐயோ- முரட்டு இரும்பு உத்திரம் நம்மீது விழுகிறது- தொலைந்தோம்!
WIDE WORLD EXH
KELFORD
ஆர்ச்சீ!


ஆர்ச்சி மினனல் வேகத்தில் செயல்பட்டது-
ஹாம்ப்!
ஹோ-
அம்மாடி- பிழைத்தோம்!
இப்போது புரிகிறதா நான் ஏன் ஆபத்தைப்பற்றியே திரும்பத் திரும்ப பேசினேன்று! இது தற்செயலான விபத்து அல்ல. யாரோ இரகசிய எதிரிகளின் கைவரிசை! பொருட்காட்சி மைதானத்தை நாம் சென்றடைவதைத் தடுக்கும் முயற்சி!
ஆர்ச்சியின் ஜெட் அமைப்பு இயக்கம் பெற்றது-
டேய்-எவன்டா அங்கே!
விடாதே ஆர்ச்சி-விரட்டிப் பிடி - அது யாராக இருந்தாலும் சரி!


அதைக் கண்டு பீதியடைந்த எதிரி தலைதெறிக்க ஓட்டம் பிடித்தான்-
ஊஹூம்- ஆர்ச்சியிடமிருந்து இப்படியெல்லாம் ஓடித் தப்பிவிட முடியாது தம்பி!


ஆர்ச்சியின் டெலஸ்கோப் கரம் நீண்டது-
ஆவ்வ்!
அட- சும்மா கத்தாமல் வா- உன்னை கொஞ்சம் போதனும்!
அம்மாடியோவ்- படுபயங்கரம்!


என் நண்பர்களை நீ என் கொல்ல முயன்றாய்?
என்னை கீழே போட்டு விடாதே- நிஜத்தை சொல்லி விடுகிறேன்!


லிஸ்டர் எனக்கு இருநூறு பவுண்டுகள் தந்தார். நீங்கள் பொருட்காட்சி நடக்-கவிருக்கும் இடத்தை சென்றடையா-மல் தடுக்க! அந்தப் பணியை ஏற்றுக் கொள்ளாதீர்கள்!


அவனிடமிருந்து விஷயத்தைக் கறக்கப் பார்!
தெய்வாதீனமாக எப்படியோ தப்பிப் பிழைத்து விட்டோம்!
WORLD WIDE EX ON
KELFORD



இப்படியே திரும்பிப் போய் விடுங்கள். இல்லையேல் நீங்கள் கொல்லப்படுவது நிச்சயம்!
விஸ்டர் என்பது யார்· சீக்கிரம் பதில் சொல்· ஆர்ச்சி பொறுமை இழந்து விட்டால் பிடியை விட்டு விடும்!
எதிரே இருந்த உயர்ந்த கட்டிடத்தின் மாடியில் முகத்தை மூடிக்கொண்டு நின்றிருந்த ஓர் உருவம் தன்னிடமிருந்த ஓர் புதிரான துப்பாக்கியை இயக்க அதிலிருந்து சக்கர வட்டரம்பம் ஒன்று சீறிக் கொண்டு கிளம்பியது·
விஷ்ஷ்!
எதையாவது உளறிவிடுமுன் அவனுடைய வாயை அடைக்க வேண்டும். ஏஜெண்ட் Zம் அந்த ரோபோவும் இப்போது அம்பு பாய்ந்த பறவைகளாக கீழே விழப் போகிறார்கள்·


எதிராளிக்குத் தெரியாது போலும் ஆர்ச்சியின் அற்புத செயல்திறன்!
க்ராக்!
ஆஆஆ!
விபரீதம்!
சங்கிலி அறுந்து விட்டது- இருவரும் கீழே விழுகிறார்கள்!
இரு உலோகங்கள் ஒன்றோடொன்று உரசவும் 'காமுரா' சப்தம் அதைத் தொடர்ந்து-
யெஸ்- அப்படித்தான்! ஜெட்டை பயன்படுத்தி பத்திரமாக தரையிறங்கு ஆர்ச்சி!
ஆர்ச்சிக்கு யாரும் யோசனை சொல்லத் தேவையில்லை!
மறுகணம்-
அதோ- உனக்காக போலீஸார் கீழே காத்துக்கொண்டிருக்கிறார் கள் பார்- அவர்களிடம் போய்-விடு- இல்லையேல், உன்னை இங்கே அனுப்பியவர்களே கொன்றுவிடுவார்கள்!
LION


கீழே குதித்த ஆர்ச்சி தோழர்களை நோக்கி ஓடி வந்தது.
உடனே காரைக் கிளப்புங்கள். லிஸ்டர் என்கிற பேர்வழி நம்மை தடுத்து, துரத்தியடிக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறான் என்று தெரிகிறது. நாம் தாமதமின்றி அரங்கத்தை சென்றடைய வேண்டும்!


லிஸ்டர் பின்னணியிலிருந்துகொண்டு ஆட்களை தூண்டி வருகிறான். பொருட்காட்சி நடக்கவிடாமல் தடுக்க நினைக்கிறான் போலும். எனவேதான் நாம் செக்யூரிட்டிகளாக செயல்படுவதை அவன் விரும்பவில்லை!
பொருட்காட்சி நாளை திறக்கப்படவிருக்கிறது. எந்த அசம்பாவிதமும் நிகழாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நம்முடைய பொறுப்பு!


பொருட்காட்சி மிகப் பிரம்மாண்டமான அளவில் உருவாக்கப்பட்டிருந்தது.
அடேயப்பா- படு ஜோரா இருக்கு!
பல மில்லியன் பவுண்டுகள் முதலீடு செய்யப்பட்டிருக்கக்கூடும்! உலகிலிலுள்ள அனைத்து நாடுகளும் பெவிலியன்கள் அமைந்திருப்பதாகக் கேள்வி!


வேறு பாதுகாப்பு குழுவினர் இருந்த போதிலும் இவர்கள் மூவர் மட்டும் சிறப்புப் படையாகச் செயல்பட்டனர்.
முதலில் ஒரு சுற்று போய் நோட்டமிடுவோம். வழி நடத்திச் செல் ஆர்ச்சி!
ஆர்ச்சிக்கு வேறு சில உண்மைகளும் தெரியும்!
யாருக்கோ இந்த பொருட்காட்சி நடப்பது பிடிக்கவில்லை!


ஒரு பெவிலியனுள்-
அந்நாளைய இலண்டன்! கடந்த காலத்திற்குள் காலடி வைத்த பிரமையை ஏற்படுத்துகிறது!
விசேட விளக்கு அமைப்பு காரணமாக பகல் மாதிரி இருக்கிறது இங்கே!


திடீரென்று குதிரைகளின் குளம்பொலி உரத்து எழுந்தது-
ஜாக்கிரதை! ஒரு கோச்சு வண்டி ஓடி வருகிறது -ஓட்டுநர் யாருமின்றி!
ஆர்ச்சி- அதை தடுத்து நிறுத்த முடியுமா பார்- இல்லையேல் நாசம் விளையக்கூடும்!


வாவாவ்வ்! குதிரைகளை மிரண்டோடச் செய்தது யாரோ-தெரியவில்லையே-


விக்டர்-வா-நாமும் ஓடிச் சென்று ஆர்ச்சியோடு சேர்ந்து கொள்வோம் விபரீதங்கள்முளை விடத் தொடங்கி விட்டன-
வாஸ்தவம்தான்! குதிரைகள் தாமாக இப்படி ஓடி வந்தி-ருக்காது!


உயரத்தில் யாரோ நகர்வது தெரிந்தது-
விக்டர்! அங்கே கவனி- முகமூடி-யணிந்த ஓர் உருவம். விளக்கு சுவிட்ச் போர்டை நெருங்குகிறது!


மறுகணம், விளக்குகள் அடுத்தடுத்து அணையலாயின-
நிலவொளி அளவு வெளிச்சமே மிச்சம்-மூடுபனி பரவுகிறது-எதிரிகளை தீர்த்துக் கட்ட எனக்கு தேவைப்படும் சூழலை உருவாக்கியாயிற்று-


நண்பர்கள் ஓட்டம் பிடித்தனர்-
ஆர்ச்சி, ஆர்ச்சி! நீ எங்கே இருக்கிறாய்? மூடுபனியில் எதையுமே பார்க்கமுடியவில்லை!
மூடுபனி இல்லை! மூச்சுத் திணறுகிறது எனக்கு- ஏதோ ஒரு வகை வாயு இது!


அப்பாடா- ஒரு வழியாக குதிரைகளை மடக்கி விட்டது ஆர்ச்சி- ஒரு சில அலங்கார மெழுகுச் சிலைகள் நாசமான-தைத் தவிர வேறு குறிப்பிடும்படியான சேதம் இல்லை. இந்தக் குதிரைகளை வெருண்டோடச் செய்தது யாராக இருக்கும்?
WINES & SPI


குதிரைகளை கட்டிப்போட்டபின் உரக்கக் குரல் கொடுத்தது ஆர்ச்சி-
விக்டர்-தாம்சன்- பிரச்னை தீர்ந்தது! நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?
பதிலைக் காணோமே! ஏதோ ஆபத்து என்ன விபரீதமோ?


மயக்க வாயுவின் பிடியில் சிக்கித் திணறிக் கொண்டிருந்தனர் தோழர்கள்!
மூச்சுத் திணறுகிறது- ஆர்ச்சீ! ஹெல்ப்!
என் பலமெல்லாம் வழிந்து விட்டதுபோல் தோன்று கிறது-தாங்கமுடியவில்லை!



மேலே இருந்த மாய மனிதன் வெற்றிப் புன்னகை புரிந்தான்-
இனி அவர்களை யாராலுமே காப்பாற்ற முடியாது- இந்த அசம்பாவிதம், பொருட்காட்சி திறக்கப்படுவதை தடுத்துவிடுவது உறுதி!
இதோ-வந்துவிட்டது ஆர்ச்சி! தாக்குப் பிடியுங்கள்!
ஓடிச் சென்று தோழர்களை நெருங்க அவகாசமில்லை, தன் மார்பு அறை-யை திறந்து காற்றைப் பீச்சியது ஆர்ச்சி-
விஷ் ஷ் ஷ் ஷ்!
காற்று தோழர்களை பின்னுக்குத் தள்ளிவிட்டு, வாயுவையும் அகற்றி விட்டது!
மறுகணம்-
தப்பிவிட்டார்களே- அந்த சைத்தான் ரோபோ நாசமாகப் போக!
இவர்களுக்கு சுத்தமான காற்று உடனடியாகத் தேவை!


கட்டிப் போட்டிருந்த குதிரைகளை அவிழ்த்து விட்டு, தோழர்களை கோச்சு வண்டியில் ஏற்றிக் கொண்டு பறந்தது ஆர்ச்சி-
கணமும் தாமதிக்கலாகாது!
சொடேர்!
என்ன நடக்கிறது? நாம் எங்கே இருக்கிறோம்?


மற்ற செக்யூரிட்டி ஆசாமிகள் அங்கே ஓடோடி வந்தனர்-
பெவிலியன் உச்சியில் முகமூடி அணிந்த ஒரு நபர் இருக்கிறான். வெளியேறும் பாதைகளை மூடிவிட்டு அவனைத் தேடிப் பிடியுங்கள்!
எமலோகத்தினுள் நுழைய விருந்த எங்களை மீட்டு விட்டாய் ஆர்ச்சி!


வாயுவின் பிடியிலிருந்து மீண்டுவிட்ட தோழர்களும், அந்த மாய மனிதனைத் தேடும் பணியில் சேர்ந்து கொண்டனர்-
எப்படி தப்பியிருப்பான்?
ஒரு மறைவிடம் கூட விடாமல் தேடிப் பார்த்து விட்டோமே?
தாமதித்து விட்டோம்! இங்கே யாரையும் காணோமே!


வாயில்கள் அனைத்தையும் சாத்தி தாழிட்டு விட்டு. செக்யூரிட்டி ஏற்பாட்டை கடுமையாக்குவோம்-பொருட்காட்சி நாளை திறக்கப்பட விருப்பதை எந்த அசம்பாவிதமும் தடுக்க முடியாதபடி பார்த்துக் கொள்வோம்!
அந்த ஊடுருவல் பேர்வழி எப்படி தப்பியிருப்பான்?


அன்றிரவு மோனோ-ரயிலில் ஏறி மைதானம் முழுக்க சுற்றி வந்து காவல் காத்தனர் ஆர்ச்சியும், தோழர்களும்-
எங்கும் பூரண அமைதி நிலவுகிறது! காவலாளிகள் முற்றுகையிட்ட பிறகும் அந்த ஊடுருவல் பேர்வழியினால் எப்படி வெளியேற முடிந்தது!
ஏதாவது இரகசியப் பாதை இருக்கிற-தோ என்னவோ?


ஓரிடத்தில் ஆர்ச்சி மோனோ-ரயிலை நிறுத்தியது
ஓர் அருமையான யுக்தி-யார் கண்ணிலும் படாமல் மீண்டும் நாம் பெவிலியனுக்குள் நுழைந்து பார்ப்போம்!
உன் திட்டம் எப்போதுமே அபாரமானதாகத்தான் இருக்கும்-சரி அப்படியே செய்வோம்!



சுருக்குக் கயிறு ஒன்றை வீசி கீழிறங்க வகை செய்தது ஆர்ச்சி-
காவலாளிகளைக் கூட ஆர்ச்சி நம்பத் தயாராக இல்லை!
பின்னர்-
பெவிலியன் பூட்டிக் கிடக்கிற தே- எப்படி நுழைவது?
ஆர்ச்சி அதற்கும் வழி செய் யும்!
இதோ- நொடியில் வழி உருவாகி விடும்!
காவலாளிகள் யாரேனும் வந்து விடப் போகிறார்கள்- சீக்கிரம் ஆகட்டும்!


உள்ளே -
சீக்கிரம் உள்ளே போங்கள்-
பாதையை மூடி வைத்து
விட்டு வருகிறேன்!
மயான அமைதி நிலவுகிறது-
எனக்கு ஒரேயடியாக கிலி
ஏற்படுகிறது!
சில மெழுகுப் பொம்மைகள் நிறுத்தப்பட்டிருந்த இடத்தை
அடைந்ததும்
இந்த போலீஸ் சீருடைகளை
கழற்றி எடுத்து அணிந்து
கொள்ளுங்கள். பின்னர்
கண்ணையும், காதையும் கூர்
மையாக்கிக் கொண்டு காத்தி
ருப்போம். முகமூடி மனிதன்
திரும்பவும் இங்கே வந்தால்
வகையாக மாட்டிக் கொண்டு
விடுவான்!
எனக்கு இஷ்டமில்லை
ஆனல் வேறு வழி?


ஏதோ ஒரு இரகசிய வழி இங்கே இருக்கக் கூடும்!
மெழுகு சிலைகளாக நாம் இங்கே நின்ருல் கொஞ்சமும் சந்தேகிக்காமல் அம்மனிதன் இங்கே திரும்பி வரக் கூடும் என்று கருதுகிறது ஆர்ச்சி
27


தம் பிடித்து அங்கிருந்த தபால் பெட்டியை தூக்கியது ஆர்ச்சி-
என்ன செய்வதாக உத்தேசம் ஆர்ச்சி?
இதனுள் ஆர்ச்சி ஒளிந்து கொள்ளப் போகிறது. உரக்கப் பேசுவதை நீங்கள் தவிர்க்க வேண்டும்!


யாரும் ஆர்ச்சியைக் கண்டுபிடிக்கவே முடியாது. ஆனால் துரிதமாக வெளியேற வேண்டிய நெருக்கடி ஏற்பட்டால் சற்று திணறிப் போய் விடும்!
சரி- நாடகத்தை அரங்கேற்றுவோம்!



நேரம் ஓடிக் கொண்டிருந்தது.
ஏதோ ஓசை கேட்கிறது! அதோ அங்கே உள்ள சாக்கடை-திறப்பு தூக்கிக் கொள்கிறது!
பெவிலியனுக்கு அடியில் சுரங்கப் பாதை ஒன்று இருக்கும் போலிருக்கிறது!
இரண்டு உருவங்கள் நிதானமாக மேலேறி வந்தன.
இங்கே யாரும் இல்லை! இம்முறை பிழை நேர்ந்திடலாகாது என்று கடுமையாக எச்சரித்திருக்கிறார் லிஸ்டர்!
மிகவும் ஜாக்கிரதையாக செயல்படுவோம்!
உஷ்ஷ்! நான் சமிக்ஞை செய்ததும் தாக்குதலை தொடர்ந்து விடுங்கள். அதிரடியாக தாக்கி சுலபமாக வீழ்த்தி விட முடியும்!
அவர்கள் முழுவதுமாக வெளியேறி வரட்டும்!



தன கையிலிருந்த கழியை வீசியெறிந்தான் விக்டர்-
ஆர்ச்சி- தாக்குதலை தொடங்கு!
துப்பாக்கி வைத்திருப்பவனை நான் கவனித்துக் கொள்கிறேன்!
ஐயியீ!
ணங்!
நிலைகுலைந்து சரிந்து விழுந்தது ஒரு உருவம்-
தப்பியோடுகிறான்- விடாதே-
ஐயோ! ஆபத்து!
டெலஸ்கோப் கரத்தை பயன்படுத்து- ஆர்ச்சி!


தடை ஒன்றின் மீது மோதிக் கொண்டு விட்டது ஆர்ச்சி-
க்ராஷ்
ஆர்ச்சி-ஜாக்கிரதை! பயல் எதையோ வீசி-யெறிகிறான்.
அவன் வீசியெறிந்தது ஓர் வெடிகுண்டு! மறுவினாடி அங்கே தீப்பற்றிக் கொண்டு விட்டது
விபரீதம்!
பூம் பூம்!
பற்றி எரியும் இரசாயனக் கலவை உள்ளடங்கிய குண்டு அது போலும்!


மிரண்டு பின் வாங்கினார்கள் தோழர்கள்–
இரண்டு முகமூடி மனிதர்களும் தப்பியோடிவிட்டார்கள்!
தொலைகிறார்கள் விடு! விரைந்து ஏதாவது செய்தாலன்றி இன்னும் கொஞ்ச நேரத்தில் பெவிலியன் மொத்தமும் தீக்கிரையாகப் போகிறது!


ஆர்ச்சி தீயை அணைக்க உடனே ஏதாவது செய்யேன்!
தண்ணீர் வேண்டும் தீயை அணைக்க! இதோ ஒரு குளம் இருக்கிறது!


பெவிலியனுக்கு வெளியே-
தீ! சைரன் அலறட்டும்!
தீயணைப்பு படைக்கு செய்தியனுப்புங்கள்!


குளத்தினுள் குதித்த ஆர்ச்சி விரைந்து செயல்பட்டது-
பம்ப் அமைப்பை முழு வேகத்தில் இயக்கு- கிறது ஆர்ச்சி- இதோ!
வெப்பம் தாங்கவில்லை- நீரினுள் குதித்து விட வேண்டியதுதான்!


தண்ணீரை பீச்சியடித்து ஆர்ச்சி-


கூரை மொத்தமும் அப்படியே சரிந்தது-
ஐயோ- நம் மீதுதான் விழப் போகிறது!
ஆர்ச்சி- ஹெல்ப்!


இதற்கிடையே- தப்பியோடிய முகமூடி ஆசாமிகள் மர்மத் தலைவன் முன்னால் போய் நின்றனர்-
மாஸ்டர்- பணியை கச்சிதமாக நிறைவேற்றி விட்டோம். பெவிலியனை தீக்கிரையாக்கி விட்டோம்!
பலே! ஒன்று உறுதியாகி விட்டது. பொருட்காட்சியின் அந்த பகுதி பொதுமக்களுக்கு நாளை திறக்கப்படப் போவதில்லை!


அங்கேயோ-
தாம்சன்- வேகமாக நீந்தி அப்பால் போயிடலாம் வா!
அவகாசமில்லே- ஆர்ச்சி அதை எப்படியாவது தடுத்து நிறுத்-தினால்தான் பிழைப்போம்!
35


சிக்கென்று பற்றிக் கொண்டு விட்டது ஆர்ச்சி.
ஆர்ச்சியின் ஆற்றலுக்கு நிகரே கிடையாது!
கம்ப்யூட்டர் மூளையின் சிந்தனை வேகமும் அபாரமானது!


கூரையை நீருக்குள் மூழ்கடித்து தீயை அணைத்தது ஆர்ச்சி-
தீயை அணைக்க தொடர்ந்து போராடு ஆர்ச்சி- உதவி வந்து சேரும் வரை!


ஒருவழியாக சற்றைக்கெல்லாம் தீயணைப்பு படையினர் அங்கே வந்து சேர்ந்தனர்.
அந்த ரோபோ ஒரு பெரிய தீயணைப்புப் படைக்குச் சமம். அதன் உதவி மட்டும் கிடைத்திராவிடில் பெவிலியனை நாம் காப்பாற்றியிருக்கவே முடியாது!
ஆனாலும் நிலவரம் சற்று சீர்கெட்டுத்தான் போயிருக்கிறது!
தீ அணைக்கப்பட்டதை அடுத்து
எதிரிகள் ஜெயித்து விட்டார்கள்! பாதி எரிந்துபோன பெவிலியனை நானே எப்படி பொதுமக்கள் பார்வைக்கு திறந்துவிட இயலும்- நீங்களே கூறுங்கள்!
ஆர்ச்சி இருக்கிறது-எதையும் சாதிக்க! அதன் செயல்வேகத்தை நம்பமாட்டீர்கள்- நேரில் பார்த்தால் அதிசயித்துப் போவீர்கள்!


செப்பனிட தேவையான சாமான்கள் உடனடியாக வந்திறங்கின-
ஆர்ச்சி எங்கே காட்டு உன் திறமையை! பொருட்காட்சி இன்னும் ஆறு மணி நேரத்தில் திறக்கப்படவிருக்கிறது!
அடேயப்பா!


ஆர்ச்சி துரித கதியில் இயங்கியது-
நாம் பத்துப் பேர் இங்கே இருந்தும் அதனுடைய வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியவில்லை- பார்த்தீங்களா?
அதற்கு களைப்பே ஏற்படாது போலிருக்கிறது!
கணப் பொழுதும் வீணடிக்கலாகாது ஆர்ச்சி!


நம்பவே முடியவில்லை! இந்தக் கோபுரத்தை நிர்மாணிக்க நமக்கு பல நாட்கள் தேவைப் படும்!
ஆனால் ஆர்ச்சியோ சில நிமிட அவகாசத்-தில் உருவாக்கி விட்டதே!
விடிந்து கொண்டிருந்தது-
வேலை முடிந்தது! குறித்தநேரத்-தில் பெவிலியனை பொதுமக்கள் பார்வைக்கு திறந்து விடலாம்!
PAVILION
சபாஷ்!
நாசவேலைக் கும்பலின் முயற்சி முறியடிக்கப்பட்டுவிட்டது!
அதிகாரி ஒருவரிடம் உரை-யாடிக் கொண்டிருந்தான் தாம்சன்
பெவிலியனுள் வர முகமூடி மனிதர்கள் பயன்படுத்திய சுரங்கப் பாதையினுள் நுழைந்து நாம் முன்னேறினால் அவர்களுடைய மறைவிடத்தை சென்றடைந்து விட முடியும் என்று தோன்றுகிறது!


அந்த யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டதையடுத்து-
ஆனால் இன்னும் சற்று நேரத்தில் மக்கள் ஆயிரக்கணக்கில் உள்ளே வரும்போது பளு தாங்காமல் சுரங்கப்பாதை சரியுமேயானால் பயங்கரவிபத்து சம்பவிக்கலாம்!
ஆமாம்-சந்தேகமேயில்லே!
எனவே, துப்பறிய இது தருணமல்ல! பொதுமக்களின் பாதுகாப்புக்குத்தான் முதலிடம்! உடனடியாக இந்த சுரங்கப் பாதையை காங்கிரீட்டால் நிரப்பி தளத்தை கெட்டிப் படுத்த வேண்டியது அவசியம்!
ஆர்ச்சி, மறுபடியும் நீ நேரத்தோடு போட்டி போட வேண்டிய நெருக்கடி வந்துள்ளது!
டன் கணக்கில் சிமெண்ட் கலவை தயாரானது-
ஆர்ச்சியின் வேகத்துக்கு இந்த கலவை எந்திரங்கள் ஈடு கொடுக்க முடியாமல் திணறுகின்றன- பார்த்தீர்களா?
சட்டென்று இறுகிவிடும் உயர்ரக சிமெண்ட் இது!


சுரங்க வாயில் வழியாக ஏகப்பட்ட சிமெண்ட் கலவை துரிதமாக கொட்டப்பட்டது-
CONCRETE
ஆர்ச்சியின் வேகத்துக்கு கலவை இயந்திரங்கள் ஈடு கொடுக்க முடியுமா என்று பார்த்து விடு-வோமா?
பல நாட்கள் பிடிக்கும் வேலை சில மணி நேரத்தில் முடிந்து விடும் போலிருக்கிறதே- ஆச்சரியம்தான்!


ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்த நேரத்திற்கு பொருட்காட்சி முறைப்படி திறக்கப்பட்டு விட்டது-
மக்கள் வரத் தொடங்கி விட்டார்கள். அற்புதம் நிகழ்த்தி விட்டாய் ஆர்ச்சி!
எதிரிகள் மறுபடியும் ஏதாவது ஒரு நாசவேலையில் இறங்க திட்டமிடக்கூடும்!
சுரங்கத்தினுள்ளே சென்று ஆராய அவ-காசம் கிடைக்காமல் போனது நம் துரதிர்ஷ்டமே!


அப்போது-தரைக்குக்கீழே-
சுரங்கப்பாதை அடைக்கப்பட்டு விட்டது. எல்லாம் அந்த சைத்தான் ரோபோவின் வேலை!
விஷயத்தை உடனே லிஸ்டருக்கு தெரியப்படுத்துவோம்!


லிஸ்டரின் இரகசியப் பாசறையில்
கையாலாகாத உதவாக்கரைகள்! சே- இனி பொருட்காட்சி மூடப்பட வேண்டுமேயானால் முதலில் அந்த ரோபோவை ஒழித்துக்கட்ட வேண்டும். அந்த மூவர் குழு ஒழிக்கப்பட்டாலன்றி நாம் எதையுமே சாதிக்க முடியாது!



அங்கே ஆர்ச்சி குழுவினர்
இப்படியே சுற்றிச் சுற்றி வந்து கண்காணிப்போம். அடாவடியாக எதையும் செய்ய நினைக்காதே ஆர்ச்சி-
நாம் விழிப்போடிருக்க வேண்டியது அவசியம்! முகமூடியணிந்த எதிரிகள் வேறு ஏதாவது நாசவேலையை எந்த விநாடியிலும் தொடங்கக் கூடும்!
லிஸ்டர் ஏன் பொருட்காட்சி நடக்கவிடாமல் தடுக்க முயற்சிக்க வேண்டும்! ஆர்ச்சியின் கம்ப்யூட்டர் மூளைக்குக்கூட காரணம் எதுவும் புலப்படவில்லையே!
உனக்கே புரியாதது எங்களுக்கா புரியப் போகிறது ஹூம்!


அப்போது-
ஆர்ச்சி கீழே பாரேன்! படகு ஒன்றில் தீப்பற்றிக் கொண்டு விட்டது! என்ன வகையான விபரீதமோ அது! உடனே ஆராய வேண்டியது அவசியம்!
ஆல்ரைட்- நேராக அங்கே போவோம்!
44


கணப் பொழுதையும் வீணடிக்க ஆர்ச்சி விரும்பவில்லை.
அவசரம் என்பதற்காக இப்படித்தான் பாலத்தின் அடியில் புகுவதா?
சரியான எமன்! சொன்னாலும் கேட்டுத் தொலைய மாட்டான்!
ஹெலிகாப்டர் படகை நெருங்கியபோது-
ஹே- ஆபத்து!
ரட்டட்டட!
படகிலிருந்த இரு கனரக மெஷின்-கன்கள் ஹெலிகாப்டரை குறிவைத்து முழங்கத் தொடங்கின- ஆனால் படகில் யாரையும் காணோம்!



காற்ருடிகள் சிதைந்து போய்விட்டன. ஹெலிகாப்டர் தலைகுப்புற விழுகிறது!
ஆர்ச்சி- ஏதாவது செய் உடனே!
கண்ணுடி முகப்பை தகர்த்துக் கொண்டு வெளியே பாய்ந்தது ஆர்ச்சி-
பார்த்தாயா அவனுடைய சுயநலத்தை! தான் மட்டும் தப்பித்துக் கொண்டு விட்டான்!
உளருதே! ஏதோ ஒரு திட்டத்தோடு தான் வெளியே பாய்கிருன்!
ஆர்ச்சி தன் ஜெட் அமைப்பை இயக்கியது-
ஹெலிகாப்டர் விழும் வேகம் கணிசமாக மட்டுப்பட்டு விட்டது.
அதிகநேரம் இப்படி தாக்குப் பிடிக்க இயலாது தோழர்களே-குதிக்கத் தயாராகுங்கள்!


பாலத்தின் மீது விழாத வாறு தவிர்த்து விட்டது அந்த ரோபோ-பொருட் காட்சியை விட இந்த நிகழ்ச்சி அட்டகாசமாக இருக்கிறது!
தாம்சன்-நாம் குதிக்க இதுவே தருணம்!


ஜெட் அமைப்பை அணைத்து விட்டு ஆர்ச்சியும் நீருக்குள் இறங்கப் போகிறது!
வியத்தகு சாதனை புரிந்து நம்மைக் காப்பாற்றி விட்டது ஆர்ச்சி!
ஜொப்புக்!


ஆர்ச்சியின் கட்டுமானத்தினுள் வெற்றிட அமைப்பு இருப்பதால் அது இஷ்டப்பட்டபோது நீரில் மிதக்க இயலும்-
ஜாக்கிரதை! படகு மோத வருகிறது அபாயம்!
இது அந்த முகமூடி ஆசாமிகளின் விஷமமாகத் தானிருக்கும்!


மரணம் தோழர்களை எட்டிப் பிடிக்க விரைந்து வந்து கொண்டிருந்தது - விசைப்படகு வடிவத்தில்-
ஊஹூம்-தப்பிக்க வழியே இல்லை-தொலைந்தோம்!
ஆர்ச்சீ-எங்களைக் காப்பாற்று!


அருகே நிறுத்தப்பட்டிருந்த பெரிய மிதவையை தூக்கி குறுக்கே எறிந்தது ஆர்ச்சி-
இதைத் தாண்டிக்கொண்டு அந்த விசைப்படகு உங்களை நெருங்கவே முடியாது!


மிதவை மீது விசையோடு மோதிக்கொண்டு விட்டது விசைப்படகு!
டமார்!
இன்னும் ஆபத்து நீங்கிய பாடில்லை ஆர்ச்சி!


ஆர்ச்சி சளைக்கவில்லை-
விசைப்படகை தாக்கப் போகிறேன்! புகை மூட்டம் நின்று விட்டது. நம்மை அருகே ஈர்க்க செய்யப்பட்ட சூழ்ச்சி அது!
இவ்வளவும் நடந்த பிறகும் பயலுக்கு புரிகிறதாக்கும்!
தொலை விசை இயக்கு முறையில் விஸ்டரின் இரகசிய மறைவிடத்திலிருந்து இயக்கப்பட்டது அந்த விசைப் படகு-
மாஸ்டர் - நம் சூழ்ச்சி தோற்றுவிட்டது- பயல்கள் பிழைத்துக் கொண்டுவிட்டார்கள்!
படகை சிதைக்க ஆவேசத்தோடு நெருங்குகிறது! அந்த ரோபோ!
அவர்கள் சமர்த்தர்களாக இருக்கலாம்-ஆனால் அத்தனை சுலபத்தில் நான் தோல்வியை ஒப்புக்கொள்ள மாட்டேன். உள்ளே ஆராய அந்த ரோபோ விசைப்படகில் ஏறக்கூடும்! அது இமாலயத் தவறு என்று உணர்த்தப் போகிறேன்!


ஆர்ச்சி பொறு-அவசரப் பட்டு எதையாவது செய்து வம்பில் மாட்டிக் கொள்ளாதே!
அந்த விசைப்படகுநமக்கு வைக்கப்பட்ட பொறியாக இருக்கலாம்-அதைதாக்கு முன் ஒருமுறைக்கு இரு-முறை யோசி!


அந்த எச்சரிக்கை ஆர்ச்சியின் செவியை எட்டிய தருணத்தில்-
ஆர்ச்சி- ஜாக்கிரதை! தொலை விசை இயக்குமுறையில் இயங்குகின்றன அந்த கனரக துப்பாக்கிகள்!
ஆர்ச்சியின் உறுதியான எஃகு உடம்பை துளைக்க முடியாமல் தோட்டாக்கள் தெறிக்கின்றன!


முன்னோக்கிப் பாய்ந்தது ஆர்ச்சி-
ஆர்ச்சியா- கொக்கான்னானாம்!
விசைப்படகில் ஓட்டை போட்டு விட்டது ஆர்ச்சி!


உறுதியான உலோகக் கரங்களின் வலிமைக்கு முன் எவையுமே தடையாக நிற்க முடியாதுதான்!
அட- உள்ளே ரேடியோ சாதனம் இருக்கிறதே!
ஹே ஆர்ச்சி- வேண்டாம்- திரும்பி விடு!
தொலைவிலிருந்துகொண்டு- குறுகிய வட்ட டி.வி. திரையில், படகில் நடப்பதை பார்த்துக் கொண்டிருந்தனர் எதிரிகள்-
ரோபோ படகில் ஏறிவிட்டது!
இந்த பட்டனை நான் அழுத்தியதும் ரோபோவின் கதை முடிந்துவிடும்!
மறுகணம் இடியோசை என எழுந்தது வெடிச் சப்தம்-
ஐயோ!
எச்சரித்தோம் ஆர்ச்சி கேட்கவில்லை!


ஓரிரு நிமிடங்களுக்குப் பின்-
தாம்சன்- நாம் பயந்தது நடந்து விட்டது!
ஹூம்- ஆர்ச்சியை இழந்து விட்டோம்! எதற்கும் அருகே போய் தேடிப் பார்க்க வேண்டும்!
POLICE


ஆர்ச்சியை தேடிக் கண்டுபிடிக்கும் பணி நடந்து கொண்டிருக்கையில்.
அந்த ரோபோ சுக்கல் நூறாகப் போயிருப்பது நிச்சயம்!
அதைத் தேடிக் கண்டுபிடிக்க நினைப்பது வீண் முயற்சி!


ஆனால் அங்கிருந்து சுமார் அரை மைல் தொலைவில் நீருக்கு அடியில்-
ஆர்ச்சி அழிந்து போய் விட்டதாக எதிரிகள் நம்பிக் கொண்டிருப்பார்கள். அந்தப் பயல் விஸ்டருக்கு மட்டும்தான் சூழ்ச்சி செய்யத் தெரியுமா என்ன?
படகு வெடித்துச் சிதறுவதற்கு சற்று முன் படகின் தளத்தில் பெரிய ஓட்டை ஒன்றை போட்டது ஆர்ச்சி-
என் மார்பு அறையில் இல்லாத கருவிகளா? ஆபத்து உருவாகி வருவதாக ஒரு சந்தேகம்- முன்னெச்சரிக்கை ஏற்பாடாக இதைச் செய்கிறது ஆர்ச்சி!


படகு வெடித்தபோது, அந்த துவாரத்தின் வழியாக நழுவி நீர்மட்டத்துக்குக் கீழே போய்விட்டது ஆர்ச்சி!
மயிரிழையில் தப்பித்துக் கொண்டு விட்டது ஆர்ச்சி!
சந்தடியற்ற இடத்தில்-
ஈஈக்- நீருக்குள்ளிருந்து ஒரு ராட்சஸ கரம் மேலே வருகிறது!
தோழர்கள் நம்பிக்கையை இழந்து விட்டனர்,
ஆர்ச்சியை இழந்துவிட்டோம்- அந்த வேதனையை என்னால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை!
நடந்ததை இன்னமும் நம்பமுடியவில்லை என்னால்! நாம் விஸ்டரை எப்படியாவது தேடிப் பிடித்து இந்த இழப்புக்கு வஞ்சம் தீர்க்கவேண்டும்!


திடீரென்று தாம்சனின் கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த டிரான்ஸ்மிட்டர் இயங்கத் தொடங்கியது-
ஆர்ச்சி அழைக்கிறது- சொல்வதை கவனமாகக் கேட்டுக் கொள்ளுங்கள்!
இது- இது ஆர்ச்சியேதான்! பயல் இன்னமும் உருப்படியாகத்தான் இருக்கிறான்- அழிந்து போய் விடவில்லை!
சரி- அது சொல்வதைக் கவனமாகக் கேள்!


ஆர்ச்சியின் ஆலோசனைப்படி தோழர்கள் ஒரு காரில் பயணமானார்கள்-
'டெபெர்ஸ் ஏரி வரை காரில் சென்று, அங்கே காரை மறைவிடத்தில் விட்டு விட்டு, மீதத் தூரத்தை கால்நடையாக கடந்து வர வேண்டும் என்று கூறியது ஆர்ச்சி!
ஆர்ச்சியின் திட்டம் என்னவென்று விளங்கவில்லை!


சில நிமிடங்களுக்குப் பின்-
தாம்சன், அதோ- ஆர்ச்சி! ஆனால் அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறான்?
மரப்பலகைகள் நொறுங்கும் ஓசை கேட்கிறது!


படகுத் துறையை பிரித்தெடுக்கிறான்- எதற்காகவோ? வெடி விபத்தின்போது பயலுக்கு ஏதேனும் ஆகிவிட்டிருக்குமோ?
க்ராக்!



தறிகெட்டுப் போய் கிறுக்குத்தனமாக எதையோ செய்து கொண்டிருக்கிறது. அதை வழிக்குக் கொண்டு வா தாம்சன்!
ஊஹூம் இப்போதெல்லாம் டிரான்ஸ்-மிட்டருக்கு அவன் கட்டுப்படுவதேயில்லை என்ற விஷயம் உனக்குத் தெரியாததா என்ன?

59


சில கயிறுகளை சேகரித்துக் கொண்டு கரையேறி வந்தது ஆர்ச்சி-
ஆர்ச்சி நில் அப்படியே! வெடி விபத்தின்போது மோசமாக பழுதாகிப் போயிருக்கிறாய் நீ. முதலில் அதை சரிசெய்ய வேண்டும்!


ஆர்ச்சி அதை காதில் வாங்கிக் கொண்டதாகவே தெரியவில்லை-தன் மார்பு அறையிலிருந்து ஒரு விசை ரம்பத்தை வெளியில் எடுத்தது-
விலகி அப்பால் போய் நில்லுங்கள்! சிந்திக்கும் பணியை கம்ப்யூட்டர் மூளை படைத்த ஆர்ச்சி-யிடம் விட்டு விடுங்கள்!
கர்ர்ர்ர்ர்!
எதற்காக அந்த மரத்தை வெட்டுகிறாய்?



மரத்தை வெட்டிச் சாய்த்தது ஆர்ச்சி-
படீர்!
புதிரான அந்த விசைப்படகு எங்கிருந்து வந்தது என்ற இரகசியம் ஆர்ச்சிக்குத் தெரியும்!
எங்கேயிருந்து வந்தது அது?




அடி மரத்தை தண்ணீரில் தூக்கிப் போட்டது ஆர்ச்சி-
இதோ பாருங்கள்- படகுத் துறைக்கு அடியில் மறைவாக ஒரு நுழைவாசல் இருப்பதை! அந்த விசைப் படகு இதன் வழியாகத்தான் வெளியேறி வந்திருக்கிறது!
உள்ளே போய் ஆராய வேண்டும்- அதுதானே உன் திட்டம்?


தன் தலையிலிருந்த முகப்பு விளக்கை எரியச் செய்தது ஆர்ச்சி.
அதுசரி. இந்த இரகசிய நிலத்தடி சுரங்கத்தை நீ எப்படி கண்டுபிடித்தாய் சொல்!
ஆர்ச்சியின் கம்ப்யூட்டர் மூளைக்கு இதெல்லாம் வெகு சுலபம்!


இந்தப் படகுத்துறைக்கு சமீபத்தில்தான் வெள்ளை வர்ணம் பூசப்பட்டிருக்கிறது. விசைப் படகு வெடிப்பதற்கு சற்றுமுன் அதன் பக்கவாட்டு சுவரில் வெள்ளை பெயிண்ட் அங்கங்கே திட்டுதிட்டாக ஒட்டிக் கொண்டிருப்பதைக் கண்டேன். அந்த பெயிண்ட் எங்கிருந்து வந்திருக்கும் என்று சிந்தித்தேன்!
அபாரமான மூளை உனக்கு. சபாஷ் ஆர்ச்சி!


ஓரிடத்தில் அந்த நிலத்தடி சுரங்கப் பாதை இரு வேறு திசைகளில் பிரிந்தது.
நீரோட்டம் நம்மை நேராக விஸ்டரின் இரகசிய தளத்திற்கு இட்டுச் செல்லக் கூடும்!
ஆனால் இங்கே பாதை பிரிகிறதே- எந்த வழியில் நாம் போக வேண்டுமோ- தெரியவில்லையே!
இதற்கிடையே விஸ்டரின் பாசறையில்-
மாஸ்டர்-ரோபோ எப்படியோ தப்பித்துக்கொண்டு விட்டது. அதுமட்டுமல்ல நிலத்தடி கால்வாயையும் கண்டுபிடித்து தன் தோழர்களோடு இங்கே வந்து கொண்டிருக்கிறது.
மரணத்தைத் வலிய நாடி வரும் அறிவிலிகள்!
ஒரு விசையை இழுத்தான் விஸ்டர்-
வெள்ள நீரை திறந்து விட்டு விட்டேன் ரோபோவும் அதன் தோழர்களும் செத்தொழியப் போகிறார்கள் ஒரிரு நிமிடங்களில்!


திடீரென்று பெரும் வெள்ளம் அவர்களை எதிர் கொண்டது-
ஆர்ச்சி! அங்கே பாரேன்- குகை முழுக்க அடைத்துக் கொண்டு வருகிறது வெள்ளம்!
தப்பிக்க வழியேயில்லை!


ஆனால் ஆர்ச்சி கலவர மடையவேயில்லை
இந்தப் பிரச்னையை ஆர்ச்சி சுலபமாக சமாளித்து விடும்-
திசையை மாற்றி ஓட்டுகிறாய்- நல்ல யுக்தி தான்!
அதோ- எதிரே ஒரு கம்பிக் கிராதியிட்ட திறப்பு!


வெள்ளம் வடிந்ததும்
இந்தக் கம்பிக் கிராதியில் ஏதே-னும் சூழ்ச்சி இருக்கலாம். எனவே, துளையிடும் கருவியை பயன்படுத்தி மேலே போக பாதை ஏற்படுத்தப் போகிறது ஆர்ச்சி!
எதாவது செய்!


மேலே ஏதோ நடமாட்டம் கேட்கிறது- லிஸ்டரின் இரகசிய தளமாக இருக்கக் கூடும்!
எதற்கும் நீ முதலில் போ ஆர்ச்சி!


இதற்கிடையே-பெல்பரி போலீஸ் தளத்தில்-
யூனிபார்ம் மற்றும் தேவையான கருவிகள் எல்லாம் சரியாக இருக்கிறதல்லவா!
சரி. புறப் படுங்கள்!


திடீரென்று ஓர் அசம்பாவிதம் முளைத்தது அங்கே.
ஹே! என்ன இது?
ஊடுருவல் முயற்சி!
POLICE


கையிலிருந்த கருவியை தூர எறிந்தது ஆர்ச்சி.
இவர்கள் போலீஸ்காரர்களாக மாறுவேடமணிந்திருக்கும் மிஸ்டரின் கூலிப் பட்டாளம். சந்தேகமில்லை!
ஆர்ச்சியின் கணிப்பு தவறோ என்று தோன்றுகிறது எனக்கு!


பிடியுங்கள் அவர்களை!
ஏய் கிட்டே வராதீர்கள்! லிஸ்டரின் கையாட்கள்தானே நீங்கள்- ஆர்ச்சியை ஏமாற்ற முடியாது தம்பிகளா!
ஆர்ச்சி- இவர்கள் நிஜ போலீஸார் என்று நினைக்கிறேன்!


தன் மார்பு அறையை திறந்து காற்றை பீச்சியது ஆர்ச்சி-
இவர்கள் மோசடிக் கும்பல் என்பதில் என்னளவும் சந்தே-கம் கிடையாது ஆர்ச்சிக்கு!
ஆல்ரைட்- உன் கம்ப்யூட்டர் மூளை தப்பு பண்ணுது!


விஷயம் சீரியஸாகப் போய்க் கொண்டிருக்கிறது- பதிலடி கொடுக்க வேண்டும்!
பிடியுங்கள்- இவர்கள் இருவரில் ஒருவன் தான் லிஸ்டராக இருக்கக் கூடும்!


மற்றவர்கள் உடனே சரணடையுங்கள். இல்லையேல் உங்கள் தலைவர் விபரீதங்களை சந்திக்க வேண்டியிருக்கும்!
எங்களை விடப்போகிறாயா- இல்லையா?
இந்த சேஷ்டைக்கு கடுமையான தண்டனை கிடைக்கப் போவது நிச்சயம்!


திடீரென்று-
போலீஸ் கார்! பெரிய்ய கம்ப்யூட்டர் மூளை உனக்கு என்று அடிக்கடி பீற்றிக் கொள்வாயே திரும்பிப் பார்? எவ்வளவு பெரிய தப்பு பண்ணியிருக்கிறாய் என்று புரியும்!
தொபுக்!
அஹ்! ஆமாம்!
POLICE
இவர்கள் நிஜ போலீஸார்!


ஏதேதோ சொல்லி உண்மையை விளக்க முயன்றனர் தாம்சனும், விக்டரும். ஆனால் அவர்களுடைய பேச்சு எடுபடவில்லை.
இவர்கள் மூவரையும் அரெஸ்ட் செய்யுங்கள்!
இவர்கள் பொருட்காட்சி நடக்க விடாமல் தடுக்க நினைக்கும் விஷமிகளின் கூட்டாளிகளாக இருக்கக் கூடும்!
பின்னர் போலீஸ் ஸ்டேஷனில்-
தயவு செய்து நாங்கள் சொல்வதைக் கேளுங்கள்-பொருட்காட்சியை பாதுகாக்கும் ஸ்பெஷல் செக்யூரிட்டி படையினர் நாங்கள். பொருட்காட்சி அமைப்பாளர்களுக்கு போன் பண்ணிக் கேளுங்கள்-நிஜம் புரியும்!
IF YOU DRINK DON'T DRIVE
உண்மையை நாங்கள் கண்டறியும் வரை உங்களை அடைத்துவைக்க உத்தரவிடுகிறேன். அந்த முகமூடிக்காரர்கள் ஒரு படுபயங்கரமான நாசவேலைக் கும்பல்!


அவர்களுடைய கையாட்களாக இருந்து, செக்யூரிட்டி படையினர் என்ற போர்வையில் நீங்கள் ஊடுருவியிருக்கலாம் இல்லையா?
தப்பான யூகம்! சை. எல்லாம் அந்த தற்பெருமை பேசும் மரமண்டை ரோபோவினால் வந்த வினை!
வேண்டாம்- விடு தாம்சன்!
மூவரும் அடைக்கப்பட்டனர்-
அடேய் இரும்புத் தடியா! ஃபாஸ்டரின் மறைவிடத்தை நீ கண்டுபிடித்த லட்சணம் நம்மை கம்பி எண்ண வைத்து விட்டது பார்த்தாயல்லவா?
சுரங்கத்தினுள் பாதை பிரிந்த போது நாம் தவறான வழியை தேர்ந்தெடுத்து விட்டோம் போலிருக்கிறது!
அதே வேளையில் தொலைவிலிருந்து அவர்களை கண்காணித்துக் கொண்டிருந்தது ஒரு கரிய உருவம்-
மாஸ்டர் பயல்கள் விபரம் தெரியாமல் போலீஸாரோடு மோதிக் கொண்டு இப்போது கைதிகளாக அடைபட்டுக் கிடக்கிறார்கள்!


லிஸ்டர் மறுமுனையில் பேசினான்-
ஹலோ-ஏஜெண்ட் X 9 செய்தி பெறப்பட்டது-உடனே திரும்பிவா! நம் பிரதம எதிரிகள் அங்கே அடைபட்டிருக்கையில், நாம் பொருட்காட்சியில் இன்னொரு முயற்சியை மேற்கொண்டோமெனில் வெற்றி கிடைப்பது உறுதி!
பைனா குலரின் கண்ணாடி மீது பட்டு சூரிய வெளிச்சம் பிரதிபலித்தது-
ஆபத்து-யாரோ நம்மை கண்காணிக்கிறார்கள்!
நாம் இங்கே அடைபட்டுக் கிடக்கும் உண்மை லிஸ்டரை எட்டுமேயானால், பொருட்காட்சியில் இன்னொரு விபரீதத்தை விளைவிக்க உடனே முயற்சியை தொடங்குவான் என்பதில் ஐயமில்லை!
இரவு வேளை கூட்டம் பொருட்காட்சியை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தது
நல்லவர்கள்போல் நடித்த மோசடி பேர்வழிகள் மூவரை கைது செய்து விட்டதாக பேசிக் கொள்கிறார்கள்.
வெறும் வதந்தி-நிஜமாக இராது!


இதற்கிடையே சிறைச்சாலையில்-
ஹேய் ஆர்ச்சி! அங்கே என்ன விஷமம் செய்து கொண்டிருக்கிறாய்?
தெரியவில்லை? சுவரில் கன்னம் வைக்கிறான்?


உஷ்ஷ்! நாம் தப்பி வெளியேற வேண்டும்- தாமதமின்றி! நாம் அடைபட்டுக் கிடக்கிறோமாதலால் லிஸ்டர் துணிச்சலாக இன்னொரு முயற்சியை மேற்கொள்ளக் கூடும்!


சந்தடி செய்யாமல் காரியத்தை செய்தது ஆர்ச்சி!
சட்டத்திற்கு விரோதமாக எதையும் செய்ய எனக்கு சம்மதமில்லை விக்டர்! ஏற்கனவே சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறோம்- இது வேறு? ஆனால்- ஆர்ச்சியின் வாதத்திலும் நியாயம் இருக்கிறது!
தப்பியோடும்போது சிக்கினோமேயானால் குறைந்தது 20 வருடங்கள் தீட்டி விடுவார்கள்!
அவர்கள் வெளியேற யத்தனித்த தருணத்தில்-
போலீஸ் நாய்கள்! நம்மை மோப்பம் பிடித்து விட்டதால் ஆக்ரோஷமாக குலைக்கத் தொடங்கி விட்டன!
ஹூம்! நமக்கு நேரம் சரியில்லை- வகையாக மாட்டிக் கொள்ளப் போகிறோம்!


அப்படி வேகமாக ஓடாதே நாங்களும் உன்னோடு ஒட்டிக் கொண்டு வெளியேற விரும்புகிறோம்!


வருவது வரட்டும் என்று ஆர்ச்சியை பின்தொடர்ந்து தோழர்கள் தலைதெறிக்க ஓட்டம் பிடித்தனர்-
ஆர்ச்சி- அவர்கள் நெருங்கி விட்டார்கள்!
இதோ- மரத்தை பிடுங்கி எடுக்கிறது ஆர்ச்சி!


புலியென பாய்ந்து வந்த நாய்களை தேக்கி நிறுத்த மரத்தை பயன்படுத்தியது ஆர்ச்சி-
மாட்டிக்கிட்டீங்களா- ஹைய்யா!
நமக்கு ஆயுள் தண்டனை வாங்கித் கொடுத்தே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறானோ?



நாய்களை தடுத்து நிறுத்தி விட்டாய்- ஆனால் விடாமல் துரத்தி வரும் போலீஸா ரிடமிருந்து எப்படித் தப்பிப்பதாம்?
எனக்கு ஆயுள் தண்டனை கிடைக்கப் போகிறது என்று அறிந்தால் வய- தான என் தாயாருக்கு நிச்சயம். ஹார்ட் அட்டாக் வந்து விடும்!
தன் மின் காந்த அமைப்பை இயக் கியது ஆர்ச்சி-
'கார் வருகிறது- நம் அருகே! ஏறிக்கொள்ளத் தயாராகுங் கள் தோழர்களே!
அடுத்து இப்- போது கார் திருட்டா?
புலம்பாதே! ஆர்ச்சி காரை இரவல் வாங் குகிறது- அவ்வளவுதான்!



வெளிக் கதவு சாத்திக் கிடக்கிறது ஆர்ச்சி!
காரைக் கிளப்புங்கள்- வெளிக் கதவை திறக்க நாழியிற்று!
அட- ஒரு டாங்க் மாதிரி வெகு சுலபமாக கதவை தகர்த்துக் கொண்டு வெளியேறிவிட்டானே!
டமார்!
கதவோடு சுவரும் கணிசமாக தகர்ந்து விட்டது பாரேன்!
சீறிக்கொண்டு வெளியேறியது அந்த இரவல் போலீஸ்-கார்!
தாவி ஏறிக்கொள் ஆர்ச்சி- சீக்கிரம்!
நான் சொல்கிறமாதிரி காரியங்களை செய்யவேண்டும் என்ன?


வலப்பக்கம் திருப்புங்கள்! ஜாக்கிரதை - பஸ் ஒன்று வருகிறது!
பஸ் வருவது எனக்குத் தெரி-யாதா என்ன? அதைக் கூட நீ சொல்ல வேண்டுமா?


கீழே குதித்த ஆர்ச்சி பின்னால் சாலையில் தடைகளை ஏற்படுத்தியது-
இதைக் கடந்து வர நீண்ட அவகாசம் பிடிக்கும்-நம்மை யாராவது துரத்தி வரும் பட்சத்தில்! அத்தோடு டெலிபோன் செய்தி அனுப்பும் வசதியையும் கெடுத்தாயிற்று!
க்ராக்!


போலீஸ் தலைமையகத்தில்
எல்லா மையங்களுக்கும் பொது எச்சரிக்கை — ஒரு போலீஸ் வேன் மேலே ஒரு ரோபோவோடு- அட என்ன ஆயிற்று- இயங்கவில்லை!


அந்த ரோபோவை விரட்டிப் பிடிக்க நம்மாலாகாது!
ஸ்கட்லாண்டு யார்டு ஆசாமிகளே திணறிப் போய் விடுவது உறுதி- நாம் எம்மாத்திரம்?


மளமளவென்று கட்டளைகளைப் பிறப்பித்தது ஆர்ச்சி-
இந்த வழியாக போவோம்- பிரதான சாலைகளை தவிர்த்து கிராமிய வழியில்போவோம்!
அதனாலெல்லாம் நாம் தப்பித்துக் கொண்டுவிட முடியாது அப்பனே!
கேட்டை இறுக மூடியது ஆர்ச்சி-
ஆனால் எப்படி?
நாம் சிறையில் அடைபட்டுக் கிடப்பதாக விஸ்டர் நம்பிக் கொண்டிருப்பான். எனவே பொருட்காட்சியில் மீண்டும் தன் கைவரிசையை காட்ட முற்படலாம். நாம் உடனே அவனை தேடிக் கண்டு பிடிக்க வேண்டும்!
போலீஸாரின் வேட்டை தீவிரமடைந்தது-
ஹலோ ஹெலிகாப்டர்- கிராமிய பகுதியை அலசுங்கள்- நாங்கள் சாலைகளை கண்காணிக்கிறோம்!
ஆல்ரைட்!


மறுகணம் -
வாவ்வ்-ஹெலிகாப்டர்கள் நம்மை கண்டுகொண்டு விட்டன!
தப்பிச் சென்று விஸ்டரை தேடிக் கண்டுபிடிப்பது சுலபமல்ல பே-சாமல் சரணடைந்து விடுவோம்-அதுதான் விவேகமான காரியமாக இருக்கும்!


விக்டர் கூறியதில் அர்த்தமிருந்தது-
காரை பின்தொடர்ந்து செல்-அவர்கள் தப்பவே முடியாது. எதிரே சுரங்கப் பகுதி ஒன்று உள்ளது. அந்தப் பகுதியை சுற்றி வளைக்கச் சொல்லி கீழே இருப்பவர்-களிடம் சொல்!
POLICE


சாலையோர பாதுகாப்பு வேலியை தகர்த்துக் கொண்டு-கார் பெரும் பள்ளத்தில் பாய்கிறதே!
அந்த ரோபோவும், இரு இளைஞர்களும் நேரே எமலோகம் சென்றடையப் போவது உறுதி!
க்ரா ஷ்


பெரும் பள்ளத்தின் அடிப்பாகத்தை கார் தொட்ட கணத்தில் பெருத்த வெடியோசை எழுந்தது அங்கே-
கண்ட்ரோல்- கார் தூள் தூளாகிப் போய் விட்டது. நாசவேலை ஆசாமிகள் மரணம் அடைந்திருப்பது நிச்சயம். எனவே, தேடும் படலம் முற்றுப் பெறுகிறது- இத்தோடு!


ஆனால் ஆர்ச்சியும், தோழர்களும் செத்துப் போய் விடவில்லை. மறைவில் ஒளிந்து கொண்டு அங்கே நடப்பதை இரகசியமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்.
போலீஸாரின் கண்ணில் மண்ணைத் தூவி விட்டோம் வெகு சாமர்த்தியமாக!
அருமையான தந்திரம் ஆர்ச்சி!


கார் பள்ளத்தில் விழுவதற்கு சற்று முன்பாக அவர்கள் காரை நிறுத்தி இறங்கிக்கொண்டு விட்டனர். பின்னர் கார் தானாகவே இயங்கிச்செல்லுமாறு தூண்டிவிட்டது ஆர்ச்சி.
ஓடிப் போய் எங்கேயாவது பதுங்கிக் கொள்ளுங்கள். போலீஸார் நம்மை பார்த்து விடலாகாது!
இப்போது, போலீஸ் ஹெலிகாப்டர்கள் தங்களை கண்டு பிடித்து விடக் கூடாது என்று பிரார்த்தனை செய்தவாறு மூவரும் வேகமாக ஓடினர்.
தடையாக எதிரே உள்ளே அந்த முள்வேலியை பிய்த்து எறி ஆர்ச்சி! அதுசரி-நாம் எங்கே போகிறோம் இப்போது!
ரயிலில் பயணம் செய்தால் சீக்கிரமே தொலைதூரம் போய்விடலாம்-காரின் சிதைவுகளை போலீஸார் ஆராய்ந்தார்கள் எனில் நம் தந்திரம் புரிந்து விடும் அவர்களுக்கு!
அதோ- ரயில் வருகிறது! தொற்றிக் கொண்டு இவ்விடத்தை விட்டு விலகிப் போய் விடுவோம்- துரிதமாக!
ஆனால் எண்பது மைல் வேகத்தில் பறக்கும் எக்ஸ்பிரஸில் எப்படி ஏறுவதாம்?


ஆர்ச்சி தன் ஜெட்-அமைப்பை இயக்கியது-
ஆர்ச்சியை இறுகப் பற்றிக் கொள்ளுங்கள்- விபரீதம் நிகழ்ந்து விடாது- ஆர்ச்சி உத்தரவாதம் தருகிறது!
ஹோ!


அங்கே சுரங்கப் பகுதியில்-
காரில் யாரும் இல்லை! விக்டரும், தாம்சனும் நம்மை நன்றாக ஏமாற்றி விட்டார்கள், சாலைகளை மூடுங்கள்- மீண்டும் தேடும் பணி தொடரட்டும்!
கால்நடையாகத்தான் போயிருப்பார்கள். அதிக தூரம் சென்றிருக்க முடியாது!
நான் அப்படி நினைக்கவில்லை. அந்த ரோபோ எமகாதக பேர் வழி!


அந்தச் சமயத்தில் ஆர்ச்சி குழுவினர் பலமைல் தொலைவு சென்று விட்டிருந்தனர்.
ஆர்ச்சி நாம் எங்கே போகிறோம்?
இங்கே ரயிலை விட்டு இறங்கிக் கொள்வோம். ஆர்ச்சியின் ஜெட் அமைப்பு தானாகவே சக்தி-யூட்டிக் கொள்ளும் என்றாலும் அதற்கு இன்னும் நிறைய அவகாசம் பிடிக்கும். எனவே


அந்தப் பெட்டியின் இணைப்பைக் கழற்றியது ஆர்ச்சி.
என்ன ஒரு சாகஸம் பார்த்தாயா?
அடுத்து என்ன செய்யப் போகிறோமோ, தெரியவில்லையே!
87



ரயில் பெட்டி வேகமிழந்து நின்றுவிட்டதும்-
போகலாமா ஆர்ச்சி!
பெட்டியை அலாக்காக தூக்குகிறானே - எதற்கு?




அடுத்து வரும் ரயில் இந்தப்பெட்டி மீது மோதிக் கவிழ்ந்து விடாமல் தவிர்க்க இந்த ஏற்பாடு- அவ்வளவுதான்!
எதையுமே அரை குறையாக செய்யப் பிடிக்காது பயலுக்கு!




போலீஸாரிடமிருந்து நாம் தப்பி விட்ட விஷயம் இன்னமும் லிஸ்டரை எட்டியிராது! நம் எதிர்ப்பு இராது என்பதால் பொருட்காட்சியில் நாசம் விளைவிக்க உடனே அவன் ஒரு முயற்சியை மேற்கொள்ளக்கூடும்!


நடமாட்டம் இல்லாது கிடந்த பஸ் டெப்போ-வினுள் நுழைந்தனர்-
விக்டர், பஸ்ஸை நீ ஓட்டு! தாம்சன், நீ பின்னால் ஏறிக் கொள்! இங்கிருந்து பொருட்காட்சிக்கு வழி எனக்குத் தெரியும்!
பஸ்ஸை ஸ்டார்ட் செய்ததும் எழும் ஓசை மற்றவர்களை விழிப்படையச் செய்து விடாதா?


ஆர்ச்சி வேறு திட்டம் வைத்திருந்தது-
CORPORATION BUS
எஞ்சினை ஸ்டார்ட் செய்ய வேண்டாம்- நான் சொன்-னதும் வண்டியைக் கிளப்-பினால் போதும்!
சப்தம் கேட்டு யாரும் ஓடி வந்து வழி மறிக்கும் அபாயம் தவிர்க்கப் பட்டு விட்டது!


விடிகாலை வேளையில், பனி கொட்டும் சாலையில் விரைந்து கொண்டிருந்தது. அந்த பஸ்-
டிரைவரோட தொப்பி இங்கேயே கிடந்தது- எடுத்து மாட்டிக் கொண்டு விட்டேன்!
யாருக்கும் இரட்டை அடுக்கு பஸ்ஸை சந்தேகிக்கத் தோன்றாது!


பொருட்காட்சி மைதானத்தை நெருங்கியதும்-
புதிராக இருக்கிறதே- எவருமே கண்ணில் படக்காணோமே!
WORLD WIDE EXHIBITION
FREE CAR PARK
பனி கொட்டுவது காரணமாக இருக்க முடியாது. இங்கே ஏதோ அசம்பாவிதம் நிகழ்ந்து கொண்டிருப்பது உறுதி!


சீக்கிரம் நிலத்தடி பாதை ஏற்படுத்து ஆர்ச்சி. நாம் விரைந்து உள்ளே போய்ச் சேர வேண்டியது அவசியம்!
எந்த வினாடியிலும் போலீஸாரின் பார்வை நம் மீது விழுந்து தொலைக்கலாம்!
16



சுற்றுச் சுவரின் உட்பக்கம் மூவரும் வெளியேறினார்கள்-
காவலாளிகளைக் கூட காணோமே! எல்லோரும் எங்கே போனார்கள்? எனக்கு என்னவோ கிலியாக இருக்கிறது!
காரணத்தை ஆர்ச்சி தாமதமின்றி கண்டுபிடிக்கும். சீக்கிரம் வெளியேறி வாருங்கள்!




ஓசைப்படுத்தாமல் மூவரும் முன்னேறி நடந்தனர்-
CHRISTMAS
நாம் மூவரும் சரியான முட்டாள்கள்! இன்றைக்கு கிறிஸ்துமஸ்- பொருட்காட்சிக்கு விடுமுறை! யாருமே கண்ணில் படாததற்கு காரணம் இப்போது புரிந்ததா?
ஆனால் இந்தச் சூழல் லிஸ்டரின் திட்டத்திற்கு ரொம்ப சாதகமானதாயிற்றே!


ஆனால் இன்னமும் விபரீதம் நிகழ்ந்து விடவில்லை என்று தோன்றுகிறது!
காவலாளிகள் நாய்களோடு இங்கே வந்து கொண்டிருக்கிறார்கள். நாம் உடனே தலை மறைவாகி விட வேண்டும்!
ஏதோ நாம்தான் நாசவேலை கும்பல் என்கிற மாதிரி ஆகிவிட்டது நிலவரம்!
அப்போது-
காண்டீனில் கிறிஸ்துமஸ் விருந்து பிரமாதம்— ஒரு பிடி பிடித்து விட்டேன்!
அதைக் கேட்டதும் எனக்கு பசி வயிற்றைக் கிள்ள ஆரம்பித்து விட்டது ஆர்ச்சி. சாப்பாட்டுக்கு உடனே ஏதாவது வழி செய்யேன்!


பெவிலியன் கூண்டினுள் மறைவாக இருங்கள். இதோ சற்று நேரத்தில் திரும்பி வருகிறேன்!
சீக்கிரமாக வந்து விடு ஆர்ச்சி!


ஜெட் அமைப்பின் துணையோடு ஜில்லென்று பறந்து சென்றது ஆர்ச்சி
மனிதர்களை சுலபமாக ஏமாற்றி விடலாம்- ஆனால் அந்த நாய்கள் ஆபத்தானவை காலடி தடம் ஏற்படுத்தலாகாது. அத்தோடு மாறுவேடமும் அவசியம்!


பனியில் விழுந்து புரண்டது ஆர்ச்சி-
குளிர்விக்கும் அமைப்பைத் தூண்டி பனி உறைந்து இருகச் செய்கிறது ஆர்ச்சி-


பின்னர் ஊழியர்களுக்கு உணவு சமைக்கப்படும் இடத்தில்-
அங்கே கவனித்தாயா. அங்கே தெரியும் பனி மனிதன் நகர்கிற மாதிரி இல்லே!
உனக்கு மனப் பிரமை! யாரோ வேடிக்கையாக அதைக் கட்டியிருக்கிறார்கள். நீ சொல்வது நிஜம் என்றால் நாய்கள் குலைத்திருக்கும்?


டெலஸ்கோப் கரம் ஓசை ஏற்படுத்தாமல் நீண்டது.
அருமையான டின்னர். இது கோபூர்களுக்கு போதும்!


அதிக ஓசை எழுப்பாமல் ஜெட் அமைப்பை பயன்படுத்தித் திரும்பியது ஆர்ச்சி.
ஹே நிஜம்தானா- நான் காண்பது?
கண்கட்டு வித்தையோ?


இதற்கிடையே அங்கே-
விஞ்ஞானக் கூடம் போலிருக்கிறது! புதிய கண்டுபிடிப்புகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன!
ராட்சஸ ரோபோ! ஆர்ச்சியை விட பல மடங்கு பெரியது. ஆர்ச்சி கண்டால் பொறாமையால் வெந்து போகும்!


மறுகணம் ஆர்ச்சி அங்கே வந்தடைந்தது-
ஆர்ச்சியைப் பற்றி இன்னும் ஒரு வார்த்தை அவதூறாகப் பேசினாலும் இந்த அருமையான உணவு தோழர்களுக்கு கிடைக்காது-சொல்லிவிட்டேன்-ஆமாம்!
ஹே-யாரது?


சொன்ன வார்த்தைகளை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன். உன்னை மாதிரி அசகாய சூரன் உலகத்தில் யாருமே கிடையாது. போதுமா?
எப்படி இவற்றை சேகரித்தாய் என்று சாப்பிட்டுவிட்டு அப்புறமாக கேட்டுத் தெரிந்து கொள்கிறேன் - ஏகப்பட்ட பசி எனக்கு!
நண்பர்கள் வயிறார உண்டு முடித்ததும்-
ஏஏப்ப்ப் ! அருமையான கிறிஸ்துமஸ் விருந்து படைத்துவிட்டாய்- ஆர்ச்சி- மிக்க நன்றி!
சாப்பிடுகிற ஆர்வத்தில் இங்கே நாம் வந்தவேளையை மறந்தே போய் விட்டோம் ஒருவேளை இன்று விஷமம் பண்ண விஸ்டர் திட்டமிடவில்லையோ- என்னவோ?
தங்களுக்குப்பின்னால் ஒரு விபரீதம் உருப்பெற்றுக் கொண்டிருந்தது அவர்களுக்குத் தெரியாது-
98


ஐயோ- அந்த சைத்தான் நாசம் விளைவிக்கிறது!
ஆர்ச்சி- அதை எதிர்க்க உன்னாலாகாது- ஓடி வந்து விடு எங்களோடு!
66


நிலை குலைந்து கீழே விழுந்தது ஆர்ச்சி-
ஆவ்வ்- என்னிடமா வாலாட்டுகிறாய்! உன்னை-
உன்னை விட அது பலசாலி என்பதில் சந்தேகமே கிடை-யாது. உன் கம்ப்யூட்டர் மூளையைப் பயன்படுத்து ஆர்ச்சி!


தொலைவிசை இயக்கு முறையில் இதை நகர்த்துபவன் நிச்சயம் லிஸ்டராகத்தானிருக்கும்!


விஸ்டரின் ரகசிய தளத்தில்-
தாம்சனும் விக்டரும் ஆர்ச்சி-யோடு இங்கே எப்படி வந்து சேர்ந்தார்களோ- புரிய வில்லையே?
நம் ராட்சஸ ரோபோ அவர்களுக்கு ஒரேயடியாக சமாதி கட்டி விடும்- ஒரிரு நிமிடங்களில்!
பிரம்மாண்டமான இயந்திரம் ஒன்றை தோழர்கள் மீது தள்ளி விட்டது அந்த சைத்தான் ரோபோ-
இதோ- ஆர்ச்சியின் 'காற்றுப் பீச்சி' அமைப்பு இயங்கி தோழர்களை அப்பால் தள்ளி காப்பாற்றி விட்டது


அந்த சைத்தானை முடக்கிப் போட முயற்சி செய் ஆர்ச்சி!


மீண்டும் ஒரு விபரீதம்-
ஆர்ச்சியால் அதற்கு ஈடுகொடுக்க முடிய வில்லை!
ஆர்ச்சி- சோர்வடைந்து விடாதே தொடர்ந்து முயற்சி செய்!
தொப்!



ஜெட்டைப் பயன்படுத்தி ஜிவ்-வென்று மேலெழும்பி சைத்-தான் ரோபோவின் வயிற்றில் ஓங்கி முட்டியது ஆர்ச்சி-
அண்ணே இது எப்படி இருக்கு?
இரண்டு ரோபோக்களுக்குமி-டையே கடுமையான மோதல் தொடர்கிறது-
கட்டிடம் மொத்தமும் அதிர்கிறது!
மிரட்சியோடு பார்த்துக்கொண்டு நின்றனர் காவலாளிகள்-
போலீஸுக்கு போன் செய் - ஓடு!
நாசவேலையில் ஈடுபட்டிருப்பதாக சந்தேகிக்கப்படும் தாம்சனும்-விக்டரும்-அதோ!


மோனோ ரயில் அமைப்பை
பிய்த்தெறிகிறது அந்த
சைத்தான். அதை தடுத்து
நிறுத்த ஏதாவது ஒரு யுக்-
தியை கடை பிடி ஆர்ச்சி!


உலோகத்தை உருக வைக்கும் அந்த வெப்பம்
ஆர்ச்சியின் விரல் நுனிகளிலிருந்து பீச்சியது
ஸ்ஸ்ஸ்ஸ்
நெஞ்சை
குறி வை!


ஆர்ச்சி ரோபோவின் கை வலுத்து வருகிறது மாஸ்டர்!
நம்முடைய ரோபோவின் வலிமையை உச்சப்படுத்தி விடுகிறேன். அந்த சுண்டைக்காய் ரோபோவை சுலபமாக நசுக்கி ஒழித்து விடும்- பாரேன்!


ஆயுதப்படையினர் அங்கே வந்து சேர்ந்தனர்-
ராட்சஸ ரோபோவின் அட்டூழியங்களை தடுத்து நிறுத்த முயற்சி செய்கிறார்கள் தாம்சனும், விக்டரும். அவர்கள் விஷமிகளாக இருக்க முடியாது!
அவனை எப்படியேனும் ஒழித்துக் கட்டு- வழிமுறை எதுவானாலும் சரி!


ஒரு விளக்கு கம்பத்தை பிடுங்கி எடுத்தது ஆர்ச்சி-
தோட்டாக்களால் அந்த சைத்தானை வீழ்த்த முடியாது என்று இவர்களுக்கு தெரியவில்லையே!
விசிறியடித்தது ஆர்ச்சி-
இப்படி முரட்டுத்தனமாகத் தாக்கியும் பலன் சிறிதும் இல்லையே- நிலவரம் சரியில்லை! ஆர்ச்சி தோற்று விடுமோ?
இதற்கிடையே- முகமூடி ஆசாமிகள் நடவடிக்கையில் இறங்கினர்-
தொடர்ந்து குடைந்து செல்லுமாறு லிஸ்டர் உத்தரவிட்டிருக்கிறார். X பிளானை நடைமுறைப்படுத்த ராட்சஸ ரோபோவின் துணை இருக்கிறது - ஆர்ச்சி ரோபோ அழியப் போகிறது!


ஐயோ - ஆர்ச்சியை வீழ்த்தி விட்டதே அந்த சைத்தான்!
ஆர்ச்சியின் கதை முடியப் போகிறது!
CAR STAFF


அடுத்து-
காரைத் தூக்கி ஆர்ச்சியின் மீது போடப் போகிறதா என்ன?
ஆர்ச்சி-ஜாக்கிரதை- உருண்டோடி விலகிக் கொள்!


என்னை ரொம்பவும்தான் துச்சமாக எண்ணிவிட்-டாய் அப்பனே!
அட-இவ்வளவு நடந்த பின்-னரும் திருப்பித் தாக்கத் துணிந்து விட்டதே ஆர்ச்சி!


ஆர்ச்சி பயந்து போய் மேலே ஓடவில்லை- அந்த சைத்தானை மேலே வரவழைக்க யுக்தி செய்கிறது என்று நினைக்கிறேன்!
ஆமாம்- அதில் சந்தேகமில்லை!


தன் மறைவிடத்தில் இருந்தவாறு அந்த ராட்சஸ ரோபோ-வை இயக்கிக் கொண்டிருந்தான் லிஸ்டர்-
என்னை என்ன முட்டாள் என்று நினைத்து விட்டார்களா? ராட்சஸ ரோபோவின் விழிகளில் உள்ள டி.வி கேமரா அந்த சுண்டைக்-காய் ரோபோவை பின்தொடர்ந்து செல்வது ஆபத்து என்று எச்-சரிக்கின்றன. அந்த ஆர்ச்சி ரோபோ மேலே மாட்டிக் கொண்டு விட்டதால், துளையிட்டுக் கொண்டிருக்கும் என் சகாக்களுக்கு எந்த ஆபத்தும் வரப் போவ-தில்லை!


இதற்கிடையே பொருட்காட்சி மைதானத்திற்குக் கீழே சுரங்கப் பாதை அமைக்கும் பணி வெகு மும்முரமாக நடந்து கொண்டிருந்தது-
இன்னும் நூறு கஜ தூரம் தான் பிளான் X நிறைவேறி விடும்!
ஆம் - இன்னும் இரண்டு மணி நேரத்தில் நாம் உலகிலேயே மிகப் பெரிய செல்வந்தர்கள் பட்டியலில் இடம் பிடித்து விடப் போகிறோம்!
ஆர்ச்சியின் தந்திரம் பலிக்கவில்லை! பொருட்காட்சியில் நாசம் விளைவிக்கக் கிளம்பி விட்டது அந்தசைத்தான்!
ஆனால் ஆர்ச்சி சட்டென்று மாற்று யுக்தி ஒன்றைக் கடைப்பிடித்தது-
உருவம்தான் பெரிது- பயலுக்கு மூளை காணாது!
க்ராக்!


ஆர்ச்சியின் ஜெட் அமைப்பு இயங்கியது-
என்ன செய்வதாக உத்தேசமோ-தெரியவில்லையே?


ஊய்ய்- மாட்டிக் கிட்டான் எக்கச் சக்கமாக!
டி.வி. கேமரா கோவிந்தா! இதை எங்கிருந்தோ இயக்கிக் கொண்டிருப்பவன் இனி எந்த விஷமமும் செய்ய முடியாது!



அங்கே லிஸ்டரின் எதிரே இருந்த டி.வி. கேமரா இருண்டு போனது.
என்ன ஆயிற்று - திடீரென்று? ஏதோ-கோளாறு ரோபோவை நிலவரத்துக்கு தக்கவாறு நகர்த்த வகையற்றுப் போய்விட்டதே!
கிடைத்த அரிய வாய்ப்பை பயன் படுத்திக் கொண்டு இஷ்டத்துக்கு உதைத்தது ஆர்ச்சி.
உடல் கொழுத்திருந் திருந்தால் மட்டும் போதாது. கொஞ்சம் புத்திசாலித்தனமும் இருக்கனும்!
தண்ணீருக்குள் தள்ளி விடப் போகிறது. பேஷ்! பேஷ்!
தண்ணீரில் மிதக்கும் வசதி ஆர்ச்சியின் தனிச் சிறப்பு. மற்ற ரோபோக்கள் மூழ்கிச் சாக வேண்டியதுதான்!
தொப்
112


கீழே சுரங்கப் பாதையில்...
சீக்கிரம் ஆகட்டும்! இயந்திரம் முழு ஆற்றலோடு செயல்படத் தூண்டுங்கள். விபரீதம் நிகழ்ந்து விட்டது மேலே! தண்ணீருக்குள் விழுந்து ஷார்ட் சர்க்யூட் ஏற்பட்டு வெடித்துச் சிதறி விட்டது ராட்சஸ ரோபோ!


திடீரென்று தரையில் படுத்து விட்டது ஆர்ச்சி.
ஹேய ஆர்ச்சி. என்ன ஆச்சு உனக்கு?
சைலன்ஸ்! கீழே ஏதோ அதிர்கிறது அதை கூர்ந்து கேட்கிறது ஆர்ச்சி!


மறுகணம்-
பின்தொடர்ந்து வாருங்கள்- அதிர்வு
ஏற்படும் இடத்தை தாமதமின்றி
சென்றடைய வேண்டும்!
ஹே- கொஞ்சம் நில்-
நாங்களும் சேர்ந்து
கொள்கிறோம்!


ஊஹூம்- ஆர்ச்சி நிற்பதாக இல்லை-
ஆர்ச்சி பெரியதொரு உண்மையை
கண்டு பிடித்து விட்டிருக்கிறது
என்று நினைக்கிறேன். இன்னும்
சற்று நேரத்தில் லிஸ்டரோடு ஒரு
நேரடி மோதலில் இறங்கப் போகி-
றோம் என்று தோன்றுகிறது!


புதிருக்கு விடை கண்டுபிடித்துவிட்ட மாதிரிதான் வாருங்கள்- ஆர்ச்சியை பின்தொடர்ந்து!
இன்னும் வேகமாகப் போ- விக்டர்!


மறுகணம் -
ஜெட்டை பயன்படுத்தி தடையை 'ஜம்ப்' பண்ணிச் சென்றுவிட்டது ஆர்ச்சி - மோதி தகர்த்துக் கொண்டுசெல்வதை தவிர வேறு வழியில்லை நமக்கு!


கோட்டை போன்றிருந்த கட்டிடத்தின் முகப்பில் போய் சைக்கிளை நிறுத்தியது ஆர்ச்சி
ஏய் நில்! அங்கே யாரும் போகக் கூடாது- தங்கம் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் கஜானா கட்டிடம் அது!
சொன்னால் கேட்கவா போகிறான்-இல்லை- அவனை யாரும் தடுத்து நிறுத்தத்தான் முடியுமா?


துளையிடும் கருவியை வெளியே எடுத்தது ஆர்ச்சி.
நிலத்தடி அதிர்வு இங்கே நின்று விட்டது! அடியில் என்னதான் நடக்கிறது என்று இங்கே தோண்டி-னால் தெரிந்து விடும்!
விஷயம் என்னவென்று எங்களிடம் கூடவா சொல்லக் கூடாது?
சட்டென்று நிலச்சரிவு ஏற்பட்டது.
ஆர்ச்சி- ஜாக்கிரதை!
கீழே ஒரு சுரங்கப் பாதை இருந்தது! குடையும் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் மிரண்டு ஓடினர்.
அந்த ரோபோ சனியன் இங்கேயும் வந்து விட்டது!
வாருங்கள்- ஓடிப் போய் விடலாம்!


முகமூடி மனிதர்களை கண்டுபிடித்துவிட்டது ஆர்ச்சி. தங்கம் பத்திரப்படுத்தப்பட்டிருக்கும் பெட்டகத்திற்கு சுரங்கப் பாதை அமைப்பது அவர்களுடைய நோக்கம். லிஸ்டரின் திட்டம் விளங்கி விட்டது- தெளிவாக!
அவர்களை விரட்டிப் பிடி ஆர்ச்சி!


தோண்டும் கருவியை கைப்பற்றியது ஆர்ச்சி-
ஓட முயற்சிக்கிறார்கள்- விடாதே!
தப்பியோடி விடலாம் என்று கனவு காணாதீர்கள்!


உயிர் பிழைத்தால் போதும் என்று தங்கால் பிடரியில் அடிபட ஓட்டம் பிடித்தார்கள் கூலிகள்
மாஸ்டரிடம் போய் விஷயத்தை சொல்லுவோம்!
ஏற்கனவே மாஸ்டரை எச்சரித்தோம் இந்த கோரோபா சுரங்கத்தைப் பற்றி!
சுரங்கத்தின் மறுகோடியில் இருந்த லிஃப்டின் பாதையை சென்றடைந்தனர் அந்தக் கூலிகள் -
ஏன் திரும்பி ஓடி வந்து விட்டீர்கள் - பைத்தியம் பிடித்து விட்டதா - உங்களுக்கு!
எங்களை நிறுத்தாதீர்கள் - விலகி வழியை விடுங்கள்!


மார்பு அறையிலிருந்து காற்றைப் பீச்சியது ஆர்ச்சி.
லிஸ்டருக்கு என் வாழ்த்துக்கள்!
ஏய்ய்!


தோழர்களும், போலீஸாரும் அங்கே வந்து சேர்ந்த போது-
தேற-விட்டுவிடு -அவர்களை- செத்துத் தொலைக்கப் போகிறார்கள்!


அரை மணி நேரம் கழித்து.
போலீஸாரிடம் அவர்களை ஒப்படைத்தாயிற்று. இனியாவது சொல்வாயா விஷயம் என்னவென்று?
பொருட்காட்சி நடப்பதை எப்படியேனும் தடுத்து விட வேண்டும் என்று லிஸ்டர் பிரயத்தனம் செய்தது ஏன்?


பல கோடி பெறும் தங்கம் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் பெட்டகத்தை சென்றடைய சுரங்கப் பாதை அமைக்கும் முயற்சியை மேற்கொண்டான் லிஸ்டர். மேலே, பொருட்காட்சி மைதானத்தில் ஜனங்கள் பெருந்திரளாக குழுமினால் சுரங்கம் சிதைந்து போகும் அபாயம் இருந்தது. எனவே பொருட்காட்சி நடப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை!
அருமையான கணிப்பு அற்புதமான சாகஸம்- பிளந்து தள்ளி விட்டாய் ஆர்ச்சி!



வெகுமதிகள் வந்து குவிந்தன.
பாராட்டுகளுக்கும் பஞ்சமில்லை-
உங்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். எங்களுடைய அன்புக் காணிக்கையாக இந்த வெகுமதியை மனமுவந்து ஏற்றுக் கொள்ள வேண்டும் நீங்கள் ஏதேனும் சொல்ல விரும்புகிறீர்களா தோழர்களே?
இல்லை! ஏனெனில் அவர்கள் எப்போதுமே தப்பும் தவறுமாக உளறுவார்கள்!
பாராட்டுக்களை பெருமையோடு ஏற்றுக்கொள்கிறது ஆர்ச்சி- நான் ஒரு மானிடன் இல்லை என்றாலும்-படு சமர்த்து!
ABC
தமாஷாக பேசுகிறது!
ஹா-ஹா-ஹா!
பயலுக்கு வரவர தலைக்கனம் எக்கச் சக்கமாக ஏறிப்போய் விட்டது! ஏதாவது செய்ய வேண்டுமே?
ஓ-செய்துவிடலாம்! ஆர்ச்சிக்கு ஒரு துணைவனை உருவாக்குவோம்-அது ஒருஎலெக்ட்ராணிக் அற்புதமாக அமையப் போகிறது பாரேன்!
முற்றும்.

## வாசகர் கடிதம்!

● இரா. காமேஷ் ராஜ், கே. குமரன்,
பழனிசெட்டிபட்டி.

''இரத்த முத்திரை'' கதையில் டெக்ஸ் வில்லர் தீபாவளிக்கு பட்டாசு விடுவதற்கு பதிலாக துப்பாக்கியை ஏந்தி சுட்டு ஒவ்வொருவரையும் பந்தாடுவது மிக அருமை.

● ஔவை நூலகம், ஈரோடு.

ஆர்ச்சி இல்லாத ஒரு தீபாவளி மலர் ஒரு மலரா என்று ரொம்ப வருத்தப்பட்டேன். ஆனால் ஆர்ச்சிக்கென்று தனி காமிக்ஸ் என்றதும் சிறகடித்து பறப்பது போல் இருந்தது. வாழ்க ஆர்ச்சி!

● M. S. ஆனந்தராஜ், மகாதேவன்குளம்.

சென்ற வருடம் தீபாவளிக்கு முன் அறிமுகமான ''காரத்தே டாக்டர் (பெஞ்சமின் ஜஸ்டிஸ்). ஸ்பைடர் குள்ளன்'' இவர்களின் கதைகள் சிலவற்றை வெளியிடுங்களேன் சார்!

● பாரதி நந்தீஸ்வரன், குமாரபாளையம்.

அன்புக்கு ஏங்கும் அனாதைச் சிறுவர்களின் கதையான கெக் தீவு மன்னன் உள்ளத்தைத் தொட்டது. லயன் தீபாவளியை தித்திக்க வைத்ததென்றால் அது மிகையாகாது.

● S. சுரேஷ் குமார், S. ரமேஷ் ஜான்,
M. கலிபத்துல்லா, உளுந்தூர் பேட்டை.

*கழிநெடிலடி ஆசிரியர் விருத்தம்.*

*சிங்கத்தின் தலைவா!*

*கழுகுப் பார்வை பெற்றவரே - பெரும்*
*கள்ளரை விரட்டும் வீரரே!*
*பழிதனைப் போக்கும் மதியரே- நற்ப்*
*புரவியின் பெருமை அறிந்தவரே!*
*இழுக்கை அகற்றும் தீரரே- கடும்*
*இரும்பு தோற்கும் நெஞ்சரே!*
*செழுமை கொண்ட மனிதரே- நீரும்*
*சிங்கத்தின் மேலேறி வாரீரோ?*

(டெக்ஸ் வில்லர் பற்றி ஒரு பாராட்டு!)


விச்சு
கிச்சு
ஹல்லோ விச்சு! இவர் தான் கர்னல் க்ராப்! பிரமாதமான வேட்டைக்காரர்!
ஆட்டக்காரரா? எங்கே இந்தப் பந்தை ஓங்கி உதையுங்கள் பார்க்கலாம்!


ஐயோ- என் கால் போச்சு!
வேட்டைக்காரன் என்று சொன்னேன் மடையா- ஆட்டக்காரனில்லை!
அச்சச்சோ!
என்ன வேட்டை உங்களுக்கு விருப்பம்?
காட்டு மிருகங்களை வேட்டை ஆடுவேன்!
உங்கள் வேட்டையில் சிக்கிய மிருகங்களை காட்டுங்களேன் கர்னல்!
பார்த்துக் கொண்டிருங்கள்- நான் டீ கொண்டு வருகிறேன்!




பிரகாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பில் லயன்காமிக்ஸை வெளியிடுபவரும், ஆசிரியரும்; S. விஜயன், முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த. பெ. எண்: 374, சிவகாசி. போன்: 21159
வெளியீடு எண்:51 அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி




இந்தக் கூப்பனை கத்தரித்து சந்தாத் தொகையுடன் அனுப்புங்கள்!

பெயர்: ______________ வயது ______________

முகவரி: ______________

______________

சந்தா அனுப்பிய விபரம்: மணிஆர்டர், டிராப்ட் ______________

(PRAKASH PUBLISHERS Sivakasi என்ற பெயருக்கு டிராப்ட் எடுக்க வேண்டும்)

**பிரகாஷ் பப்ளிஷர்ஸ்** த. பெ. எண்: 374, சிவகாசி-626 123.



அடுத்த வெளியீடு!
லயன் காமிக்ஸ்
வாரிசு வேட்டை!
ஆவ்!
முழு நீள சஸ்பென்ஸ்!
பிணம் ஒன்று! கொலை எட்டு!
அது எப்படி? மர்மத்தை துப்புத் துலக்க வருகிறார் ஹெர்லக் ஷோம்ஸ்!


ப்ளாஷ்
நாசப் பட்டாளம்!
சித்திர சிறுகதை!
லயன் காமிக்ஸ்
ரூ. 2-50
ஜனவரி 1-ல் கிடைக்கும்!

# ஹாட்-லைன்!



டியர் ரீடர்ஸ்,

"ஆர்ச்சிக்கோர் ஆர்ச்சி"யுடன் தொடங்கிய வருஷத்தை "அதிரடி ஆர்ச்சி"யுடன் முடிப்பது பொருத்தமாக இருக்குமென்று நினைத்தேன்! ஆர்ச்சியின் முழு நீள சாகஸம் கிட்டத்தட்ட ஒன்பது மாதங்களுக்குப் பிறகு வெளிவருகிறது- இன்னும் கொஞ்ச காலத்திற்கு ஆர்ச்சி திரும்பிவரப் போவதில்லை. ஆகையால் "அதிரடி ஆர்ச்சி"யை பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள்.

வரயிருக்கும் புது வருடத்தை புதிய ஹீரோவுடன் தொடங்கப் போகிறோம்! நினைத்த மாத்திரத்தில் மாயமாய் மறைய கூடிய மாயாவிகளின் கதைகளை நீங்கள் படித்திருக்கலாம். ஆனால் நினைத்த மாத்திரத்தில உருவத்தை மாற்றிக் கொள்ளும் திறன் கொண்ட சூப்பர் ஹீரோவை அடுத்த இதழில் அறிமுகப்படுத்தப் போகிறேன்! தவறாமல அடுத்த இதழான "வாரிசு வேட்டை"யை வாங்கி விடுங்கள்!

அப்புறம். அடுத்த ஹாட்-லைனில் புதிய போட்டிகள் பற்றிய விபரங்கள் இருக்கும்! 1989ல் வரயிருக்கும் கதைகள், ஹீரோக்கள் பற்றிய முன்னோட்டமும் உண்டு! இன்னும் 30 நாட்களில் சந்திப்போம்!

அனைவருக்கும் எனது (அட்வான்ஸ்) கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்!

அன்புடன்,


விசித்திர நால்வர்!
விரைவில் வருகிறது!
''எதையும் செய்து முடிப்போம் - என்பதே இந்த விசித்திர நால்வரின் இலட்சியம்! இவர்களது காமெடி சாகஸங்கள் உங்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும்
லயன்

Registered No: TN/VR/

